# முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்

Transcribed from a message spoken in August 2012 in Chennai

By *R.S.Milton*

## வெற்றியா, தோல்வியா

தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே தோல்விகள் வருமா அல்லது அவர்களுடைய வாழ்க்கை நீண்ட வெற்றியுள்ள வாழ்க்கையா? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது எளிதல்ல. *"(கிறிஸ்துவின்) உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல் எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே! மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதி காரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர் வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு விலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்,"* என்று ரோமர் *8:33-39*இல் நாம் வாசிக்கிறோமே!

"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களா யிருக்கிறோமே!" இந்த வசனம் அடிக்கடி மேற்கோள்காட்டப்படுகிற ஒரு வசனம். சில பரிசுத்தவான் களும், கிறிஸ்தவத் தலைவர்களும் இந்தப் பகுதியை வியாக்கியானம்பண்ணுவதையும், பிரசங்கம் பண்ணுவதையும் நான் கேட்டிருக்கிறேன். அதைக் கேட்டு நான் உற்சாகமடைந்திருக்கிறேன்.

நான் மாணவனாக இருந்தபோது மதுரையில் இருக்கிற பாஸ்டர் ஹாரிசின் மாரநாதா சபைக்குச் செல்வதுண்டு; அவர் மிகவும் உற்சாகமாகப் பேசுவார். அவர் CPMஇல் பாஸ்டராக இருந்து வெளியே வந்து அந்த சபையை நடத்திக்கொண்டிருந்தார். அங்கு மக்கள் கூட்டம் அலைமோதும். அவர் இப்படிச் சொல்லி நான் கேட்டிருக்கிறேன்: "பெரிய பிரசங்கிமார்கள் பிரசங்கம் பண்ணு கிறார்கள். எப்படித் தெரியுமா? சிவப்பு நூலுக்கு என்ன அர்த்தம், மஞ்சள் நூலுக்கு என்ன அர்த்தம், நீல நூலுக்கு என்ன அர்த்தம் என்று நூல்களுக்கு வியாக்கியானம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவனவன் பசியில் செத்துக்கொண்டிருக்கிறான். வியாதியிலிருந்து எப்படி வெளியே வர வேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு சிவப்பு நூலுக்கு என்ன பொருள் என்று சொல்லிக் கொடுப்பதால் என்ன பயன்? ஆத்துமாக்களை விடுவிக்க வேண்டும்," என்று அவர் அனல் பறக்கச் சொல்லும்போது மக்களெல்லாம் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். இப்படிப் பேசக் கேட்டால் உங்க ளுக்கு உற்சாகமாக இருக்குமா, இருக்காதா? நிச்சயமாக உற்சாகமாக இருக்கும். இதை சுபிட்ச சுவிசேஷம் என்பார்கள். "தேவனுடைய பிள்ளைகளுக்குத் தோல்வி என்று ஒன்று இருக்கக்கூடாது," என்று சொல்வார்கள்.

## சமநிலை

இந்தக் காரியத்தில் நாம் சமநிலையாக இருக்க வேண்டும். "தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையில் தோல்விகள் வரும்" என்பது ஓர் அற்றம். "இல்லை இல்லை, அது ஒரு நீண்ட வெற்றி வாழ்க்கை; அவர்களுடைய வாழ்க்கையில் தோல்வியே கிடையாது" என்பது இன்னொரு அற்றம். இப்படி இரண்டு அற்றங்கள் இருக்கின்றன. இந்தக் காரியத்தில் உண்மையிலேயே தேவ னுடைய எண்ணம் என்னவென்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

"*இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களா யிருக்கிறோமே!*" என்று பவுல் கூறுகிறார். We are more than conquerors in all these things என்று சொல்லும்போது அவர் என்ன பொருளில் சொன்னார்? நமக்கு ஒருநாளும் பணப் பிரச்சினை வராது என்ற அர்த்தத்தில் சொன்னாரா? அல்லது நாம் பணப்பிரச்சினையிலேதான் வாழ்வோம் என்ற அர்த் தத்தில் சொன்னாரா? நமக்கு வியாதியே வராது என்ற அர்த்தத்தில் சொன்னாரா? அல்லது நாம் வியாதிலேயேதான் வாழ்வோம் என்ற அர்த்தத்தில் சொன்னாரா? பல சமயங்களில் தேவனுடைய வார்த்தையில் பரிசுத்த ஆவியானவரின் இருதயம் என்னவென்பதை ஒரேவொரு தேவனுடைய மனி தன்மூலமாகத் தொடுவது கொஞ்சம் கடினம். வெறுமனே உற்சாகமூட்டுவதற்காகக் கொஞ்சம் வார்த்தைகளைச் சொல்வது ஒரு காரியம். ஆனால், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில்

வாழ்வது என்பது வேறொரு காரியம். அந்த உற்சாகம் மூன்று மணி நேரம் அல்லது தொடர்ந்து அந்தச் செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது இருக்கக்கூடும். ஆனால், வாழ்வின் மேடுபள் ளங்கள் வழியாக அல்லது உயர்வுதாழ்வு வழியாக அல்லது பிலிப்பியர் 4ஆம் அதிகாரத்தில் பவுல் சொல்வதுபோல வாழ்வு தாழ்வு, வறுமை வளம் ஆகியவைகளின் வழியாகப் போகும்போது "தாழ்ந் திருக்கவும் எனக்குத் தெரியும். வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட் டேன்" (பிலி. 4:12) என்ற வசனம் நம்மைச் சோதிக்கும்.

தேவனுடைய பிள்ளையினுடைய, இயேசு கிறிஸ்துவின் சீடனுடைய, பரிசுத்தவானுடைய முடிவு இவையெல்லாவற்றிலும் முற்றும் ஜெயங்கொண்ட வாழ்க்கைதான் என்று நான் விசுவாசிக்கிறேன். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் "ஜீவனாலாகிலும் சாவினா லாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார் என்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக் கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும்," என்று (பிலி. 1:20) பவுல் கூறுகிறார். *சாவினா லானாலும் அல்லது வாழ்வினாலானாலும் கிறிஸ்து தன் சரீரத்தில் மகிமைப்படுவார்* என்று தாம் நம்பு வதாக அவர் கூறுகிறார். வாழ்விலே கிறிஸ்து மகிமைப்படுவார் என்று நமக்குத் தெரியும். ஆனால், *வாழ்வில் மட்டும் அல்ல, நம் சாவிலும் கிறிஸ்து மகிமைப்படுவார் என்பது தேவனுடைய மக்க ளுடைய நம்பிக்கை.*

ரோமர் 8:33-39; பிலிப்பியர் 1:20 ஆகிய இரண்டு வசனங்களையும் நாம் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். *நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்* என்று ரோமர் 8:37ம், *சாவினாலாகிலும் ஜீவனாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தில் மகிமைப்படுவார்* என்று பிலிப்பியர் 1:20ம் சொல்லுகின்றன.

### முரண்பாடல்ல

இது ஒரு முரண்பாடுபோலத் தோன்றலாம். ஆனால், இது முரண்டபாடல்ல. வேதாகமத்திலிருந்து நான் சில எடுத்துக்காட்டுகளைத் தர விரும்புகிறேன். பல சமயங்களில் நாம் ஒரு நெருக்கத்திலே, ஒரு குறைவிலே, ஒரு சிக்கலிலே, ஒரு சஞ்சலத்திலே இருக்கும்போது எப்படி ஜெபிப்பது என்றுகூட நமக்குத் தெரியாது. எடுத்துக்காட்டாக, ஒரு வியாதியில் இருக்கும்போது, "ஆண்டவரே, இந்த வியாதியைக் குணமாக்கும்" என்று ஜெபிப்பதா? அல்லது "ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் குணமாக்கும," என்று ஜெபிப்பதா? ஒரு விசுவாசி மரணப்படுக்கையில் இருக்கும்போது, "ஆண்ட வரே, இவருடைய மரணப்படுக்கையை மாற்றிப்போடும்," என்று ஜெபிப்பதா அல்லது "ஆண்டவரே, உம்முடைய சித்தம் ஆகக்கடவது" என்று ஜெபிப்பதா? ஒரு எதிர்காலத் தீர்மானத்திற்காக ஜெபிக்க வேண்டிய தேவையிருக்கும்போது, "ஆண்டவரே, இந்தக் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்தாக வேண்டும்" என்று ஜெபிப்பதா அல்லது "உம்முடைய சித்தம் ஆகக்கடவது" என்று ஜெபிப்பதா? இப்படிப்பட்ட கேள்விகள் நமக்கு வரும்.

"இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தக் கல்லூரியில் இடத்தைக் கோருகிறேன்; இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் மரணக்கட்டிலிருந்து விடுதலையாக்குகிறேன்" என்று விசுவாசத்தோடு நாம் ஜெபிக்க வேண்டும் என்று சிலர் சொல்வார்கள். வேறு சிலர், "தேவனே, என் சித்தம் அல்ல; உம் சித்தம் ஆகக்கடவது," என்று சொல்லி ஜெபிக்க வேண்டும் என்று வேறு சிலர் சொல்லலாம். "இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே இதை மாற்றுகிறேன்," என்று சொல்லும்போது அவர்கள் சொன்னது நடைபெறாதபோது அவர்களுடைய விசுவாசம் நொறுங்கிப்போகிறது. யாருக்காக ஜெபித்தார்களோ அவர்களுடைய விசுவாசமும் நொறுங்கிப்போகிறது. இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், நாம் ஜெபிப்பதையெல்லாம் ஜெபித்துவிட்டு, "ஆண்டவரே, ஆகிலும் என் சித்தம் அல்ல; உம் சித்தமே ஆகக்கடவது," என்று ஒரேவொரு கோடு போட்டு எல்லாவற்றையும் அடித்து விடும்போது, இவ்வளவு நேரம் பண்ணின ஜெபத்துக்கு என்ன பொருள் என்பதுபோல் ஆகிவிடு கிறது. இந்தச் சிக்கல் உங்களுக்கு வந்திருக்கிறதா அல்லது வரவில்லையா அல்லது நீங்கள் இப் போது இந்தச் சிக்கிலில் இருக்கிறீர்களா? அருமையான பரிசுத்தவான்களே, எனக்கு அந்தச் சிக்கல் இருக்கிறது. இதற்கு என்ன பதில்?

### ஜீவனுள்ள சாட்சிகள்

#### யாக்கோபும், பேதுருவும்

அப்போஸ்தலர் நடபடிகளில் (13ஆம் அதிகாரம்) தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக மகா உபத் திரவம் எழுந்தது. அப்போது, ஏரோது யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைக் கைதுசெய்து

சிறையில் அடைத்தான். அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 12 அப்போஸ்தலர்களில் ஒரு வர். இந்த யாக்கோபு, யாக்கோபு நிருபத்தின் ஆசிரியர் அல்ல. ஏரோது அவரைப் பட்டயத்தால் வெட்டிக் கொலைசெய்தான். அது யூதர்களுக்கு மிகவும் பிரியமாயிருந்தது. ஆகவே, அடுத்த ஆளா கப் பேதுருவையும் பிடித்து அவன் சிறைச்சாலையில் வைத்தான். பேதுரு சிறைச்சாலையில் இருந்தபோது தேவனுடைய மக்கள் அவனுக்காக ஜெபித்தார்கள். அப்போது தேவன் தம் தூதனை அனுப்பி அவனுடைய கட்டுகளை அவிழ்த்து முதலாம் காவல், இரண்டாம் காவல் என்று எல்லாக் காவல்களையும் திறந்து, பேதுருவை விடுதலையாக்கினார்.

யாக்கோபு சிறைச்சாலையில் இருந்தபோது தேவனுடைய மக்கள் ஜெபித்தார்களா இல்லையா என்று வேதாகமத்தில் எழுதப்படவில்லை. ஆனால், தேவனுடைய மக்கள் ஜெபித்திருப்பார்களா? நிச்சயமாக ஜெபித்திருப்பார்கள். தேவ மக்கள் எப்போதெல்லாம் சித்திரவதைக்குள்ளானார்களோ அப்போதெல் லாம் ஜெபித்தார்கள். "கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர். புறஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந் திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும், பூமி யின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாச னாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே. அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனை யும் முன்குறித்தவைகள் யாவும் செய்யும்படி ஏரோதும் பொந்தியுபிலாத்தும் புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய் மெய்யாகவே கூட்டங்கூடினார்கள். இப்பொழுதும் கர்த்தாவே, அவர் களுடைய பயமுறுத்துதல்களைத் தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு வின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படிச் செய்யும்" என்று ஜெபித்தார் கள் (அப்.4:24-30). அப்போது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது என்று எழுதியிருக்கிறது.

யாக்கோபு சிறைப்படுத்தபட்டபோதும் ஜெபித்தார்கள். பேதுரு சிறைப்படுத்தப்பட்டபோதும் ஜெபித்தார் கள். யாக்கோபை தேவன் பட்டயத்திற்கு ஒப்புக்கொடுத்தார், பேதுருவை விடுதலையாக்கினார்.

**கானானியப் பெண்**

புதிய ஏற்பாட்டில் இன்னொரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அணுகின எல்லாருக்கும் அவர் விடுதலை கொடுத்தார். அவரை அணுகின யாருக்கும் அவர்கள் வேண்டின விடுதலையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்காமல் போனதில்லை. ஒருநாள் ஒரு கானானியப் பெண் அவரிடம் வந்து, "ஆண்டவரே, எனக்கு இரங்கும். என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்," என்று சொல்லிக் கூப்பிட்டாள். அதற்கு அவர், "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல," என்றார். அவள் மீண்டும் அவரை வேண்டினபோது, அவர், "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டி களுக்குப் போடுவது நல்லதல்ல," என்று சொன்னார். ஆனால், அதற்கு அவள், "மெய்தான் ஆண்ட வரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழுகிற துணிக்கைகளைத் தின்னுமே," என்று பதில் சொன்னாள். அதைக் கேட்ட அவர், "ஆ! உன் விசுவாசம் பெரிது," என்று அவளைப் புகழ்ந்தார். அவள் வேண்டிக்கொண்டதைக் கொடுத்தார் (மத். 15:22-28).

சில நேரங்களில் அவரே போய், "உனக்கு என்ன வேண்டும்?" (மாற்கு 10:51) என்று கேட்கிறார். பார்வை வேண்டும் என்றால் பார்வை கொடுத்து அனுப்புகிறார். புதிய ஏற்பாட்டின் சாட்சி அப்படி.

**நாயீன் விதவை**

மற்றவர்கள் அவரிடம் வந்து எதையும் கேட்காதபோது, அவரே மனமிறங்கிக் குணமாக்கினதும் உண்டு. நாயீன் பட்டணத்து விதவையின் ஒரே மகன் இறந்துபோகிறான். அவனை அடக்கம் பண்ணு வதற்காகக் கொண்டுபோகிறார்கள். கர்த்தர் அங்கு வருகிறார்; அவளைப் பார்த்து, "அழாதே" என்று சொல்லி, பாடையைச் சுமந்து வந்தவர்களை நிறுத்தி, "வாலிபனே எழுந்திரு," என்று சொல்லுகிறார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அதன்பின் அவனை அந்த விதவைத் தாயி டம் ஒப்புவித்தார் (லூக்கா 7:12-15). தன் மகனுக்கு உயிர் தர வேண்டும் என்று அவள் அவரிடம் கேட்டதாக வேதத்தில் சொல்லப்படவில்லை.

**பெதஸ்தா குளத்து வியாதிக்காரன்**

பெதஸ்தா குளத்தின் மண்டபத்தில் முப்பத்தெட்டு வருடங்களாக வியாதிப்பட்டிருந்த ஒருவன் படுத் திருந்தான். இயேசு அவனைப் பார்த்து, "நீ சுகமடைய விரும்புகிறாயா?" என்று கேட்டு அவனைச்

சுகமாக்குகிறார் (யோவான் 5:2-10). அவரே தானாக முன்வந்து விடுதலையாக்குகிறார், சுகமாக்கு கிறார்.

**யோவான் ஸ்நானன்**

யோவான் ஸ்நானன் பத்து மாதங்கள் சிறைச்சாலையில் இருந்தார். ஏரோது அந்திபாஸ் என்பவன் அவரைச் சிறையில் அடைத்து வைத்து, அதன்பின் சிரத்தேசம் செய்தான். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிறைச்சாலைக்குப் போய் அவரைப் பார்க்கவும் இல்லை, சிறைச்சாலையிலிருந்து அவரை விடுதலையாக்குவதற்கு முன்வரவும் இல்லை. கர்த்தர் யோவான் ஸ்நானனை நடத்தினது போல நம்மில் யாரையாவது அவ்வளவு கடினமாக நடத்தினால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

**பவுல்**

பவுலின் கைகளாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் (கைக்குட்டைகள்) கச்சைகளையும் கொண்டுவந்து வியாதிக்காரர்மேல் போட்ட போது அவர்கள் சுகமடைந்தார்கள் என்றும், பொல்லாத ஆவிகள் அவர்களைவிட்டு ஓடின (அப். 19:11, 12) என்றும் எழுதியிருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "நீ இனி மேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சைரசமும் கூட்டிக்கொள்," (1 தீமோ. 5:23) என்று எழுதுகிறார். "துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்," (2 தீமோ. 4:20) என்று சொல்லுகிறார். அவனை அவர் சுகமாக்கிவிட்டு வரவில்லை. எப்பாப்பிரோதீத்துவைப்பற்றிச் சொல்லும்போது "அவன் வியாதிப்பட்டு மரணத்துக்குச் சமீபமாக இருந்தது மெய்தான். ஆகிலும் தேவன் அவனுக்கு இரங்கினார். அவனுக்கு இரங்கினதுமல்லாமல் துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு எனக்கும் இரங்கினார்," (பிலி. 2:27) என்று அவர் எழுதுகிறார். இவைகள் வெற்றியா, தோல்வியா?

நான் இப்படிச் சொல்வதால் சுபிட்ச சுவிசேஷத்திற்கு நான் மாற்று கொடுக்கவில்லை. "அது தவறு; இது சரி," என்று நான் சொல்லவில்லை. அப்படியல்ல.

தேவனுடைய வழிகளை நம் வசதிக்கேற்ப, நம் சௌகரியத்தின்படி, நாம் வளைத்துக்கொள்ள முடியாது. *தேவனுடைய மனம் என்ன, தேவனுடைய இருதயம் என்ன, தேவனுடைய வழிகள் என்னவென்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.* "மரணத்திற்கேதுவாக அவன் *வியாதிப்பட்டிருந்தான்* என்பது உண்மைதான். ஆனால், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு வராதபடிக்கு தேவன் அவனை *விடுதலையாக்கினார்*" என்பதும் உண்மை.

அவர், "என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்," என்றார் (2 கொரி. 12:9). ஒரு பெரிய பத்தியை வாசித்தால் ஒருவேளை அது நம் இருதயத்தைத் தொடாமல் போகலாம். ஆனால், இப்படி ஒரு வாக்கியத்தை உருவி அதைத் தனியாக வாசித்தால் அல்லது யாராவது நம்மிடம் சொன்னால் அது நம்மைத் தொட்டுவிடுகிறது. "பயப்படாதே" என்று சுருக்கமாக ஒரு வார்த்தை சொன்னால் அது நம் இருதயத்தைத் தொடும். ஆனால், பல சமயங்களில் அதன் முழு இடஅமைப்பையும் நாம் பார்க்க வேண்டும்.

"என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்," என்பதற்கு நாம் என்னதான் பொழிப்புரை கொடுத்தாலும், "எனவே, உனக்கு இனிமேல் பலவீனமே இருக்காது," என்று அதை மொழிபெயர்க்கவே முடியாது. "உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்" என்பது "உனக்குப் பலவீனம் என்பதே இல்லை" என்பதற்குச் சமம் அல்ல. அதற்கு முந்தி பவுல் என்ன சொல்லுகிறார்? "அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது," என்று அவர் சொல்லுகிறார். "அது என்னைவிட்டு நீங்கும்படி நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண் டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்," என்றார். இவ்வளவு காரியம் அங்கு இருக் கிறது. இன்னும் சொல்லப்போனால் இதற்கும் மேலாகப் போகவேண்டியிருக்கிறது. அது எப்படிப் பட்ட வெளிப்பாடென்றால், "ஒருவன் மூன்றாம் வானத்துக்கு எடுக்கப்பட்டு, மனிதர்கள் பேசப்படாத வாக்குக்கெட்டாத வார்த்தைகளை அவன் கேட்டான். அவன் சரீரத்தில் இருந்தானா அல்லது சரீரத் திற்கு வெளியே இருந்தானா என்று எனக்குத் தெரியாது," என்று தன்னைப்பற்றி மூன்றாம் நபராக வைத்துச் சொல்லுகிறார். "இப்படிப்பட்ட பெரிய வெளிப்பாடுகளினிமித்தம் என்னை நான் உயர்த்தாத

படிக்கு என் சரீரத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது," என்று அவர் சொல்லுகிறார். இருப்பது முள் என்றால் நாம் ஜெபிக்க வேண்டும். எப்படித்தான் ஜெபிக்க வேண்டும்? "ஆண்டவரே, இந்த முள் என்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும்," என்றுதான் ஜெபிப்போம்.

ஒருவர் வியாதியாயிருக்கும்போது, "தேவனே, அவரைச் சுகமாக்கும்," என்பதுதான் இயல்பான, சாதாரணமான ஜெபம். எடுத்தவுடனேயே, "ஆண்டவரே, அவருடைய பாவங்களையெல்லாம் மன்னியும்," என்று ஜெபிப்பது இயல்பான ஜெபம் அல்ல. "ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்...அவன் பாவம் செய்தவனானால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்," (யாக்கோபு 5:12-15) என்று யாக்கோபில் இருக்கிறதே என்று சிலர் சொல்லக்கூடும். "ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் அவனைக் குணமாக்கும். இல்லையென்றால் அவனை எடுத்துக்கொள்ளும்," என்பது சாதாரணமான ஜெபம் அல்ல. நாம் நம் பிதாவினிடத்தில் போகும்போது பிள்ளைகள் தகப்பனிடத்தில் கேட்பதுபோல் நம்பிக்கையோடுதான் கேட்க வேண்டும்.

"உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்," என்று சொன்னபிறகு பவுல் என்ன சொல்லுகிறார் பாருங்கள். 2 கொரிந்தியர் 12:9யைவிட 10தான் அற்புதமான வசனம். "அந்தப்படி, நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்." மூலமொழியில் சொல்லப்பட்டிருக்கும் காரியம் தமிழில் போதுமான அளவுக்குச் சொல்லப்படவில்லை. அது "நான் பிரியப்படுகிறேன்" என்று இல்லாமல் "நான் அதைக் கொண்டாடுகிறேன். என் பலவீனங்களைக்குறித்து நான் கொண்டாடுகிறேன்," என்று இருக்க வேண்டும்.

## சாவானாலும், ஜீவனானாலும்

பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தை எழுதியபோது பவுல் சிறைச்சாலையில் இருந்தார். பவுல் இரண்டுமுறை சிறைச்சாலையில் இருந்தார். முதல் சிறையிருப்பு வீட்டுக்காவல். இரண்டாவது சிறையிருப்பு உண்மையாகவே கடுங்காவல். ஒரு கொடிய குற்றவாளியைப்போல் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பிலிப்பியருக்கு எழுதிய கடிதம் முதல் சிறையிருப்பில், அதாவது அவர் வீட்டுக்காவலில், இருந்தபோது எழுதிய கடிதம். பிலிப்பு பட்டணத்திலுள்ள பரிசுத்தவான்களிடத்தில் தனக்காக ஜெபிக்கும்படிச் சொல்லுகிறார். "ஜீவனாலாகிலும் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார் என்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும்," என்று அவர் சொல்லுகிறார் (பிலி. 1:20). "தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசை உண்டு. அது அதிக நன்மையாயிருக்கும். அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்," (பிலி. 1:23, 24) என்று சொல்லுகிறார்.

சிறைச்சாலையிலிருந்து பிலிப்பியருக்கு எழுதிய இந்தக் கடிதத்தில் "*மகிழ்ச்சியாயிருங்கள்*" என்ற வார்த்தையை பவுல் அடிக்கடி எழுதுகிறார்.

நான் நிறைய எடுத்துக்காட்டுகள் சொன்னேன். தேவனுடைய பிள்ளைகள் வியாதியில் இருந்தார்கள். பண நெருக்கடியில் இருந்தார்கள். பிலிப்பியர் 4ஆம் அதிகாரம் பவுல் பண நெருக்கடியில் இருந்தார் என்று தெளிவாகக் கூறுகிறது. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று பவுல் சொல்லுகிறார் (பிலி. 4:13). *எல்லாவற்றையும்* என்று பவுல் சொன்னாலும் இங்கு குறிப்பாக அவர் ஒரு காரியத்தைச் சொல்லுகிறார். அவர் எதைச் சொல்லுகிறார்? "என்னிடத்தில் இப்போது பணம் இல்லை. ஆனால், பணம் இல்லாமல் என்னால் வாழ முடியும்" என்பதே பிலிப்பியர் 4ஆம் அதிகாரத்தில் அவர் பிலிப்பிய விசுவாசிகளுக்குச் சொல்லுகிற காரியம். இது "நீங்கள் அனுப்பின பணத்தை நான் பெற்றுக்கொண்டேன்" என்று மனமகிழ்ந்து பவுல் கொடுக்கிற ரசீது. ஆனால், அதற்குமுந்தி அவர் சொல்லுகிறார். "பணத்தைப் பெற்றதற்காக எனக்கு அப்படியொன்றும் அதிகமான மகிழ்ச்சி இல்லை. ஆனால், உங்கள் இருதயத்தைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பணம் தந்ததல்ல மகிழ்ச்சி. என்னைப்பற்றி நினைக்க வேண்டும். உங்கள் பணத்தை நீங்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் உதித்ததே! அது என்னை மிகவும் மகிழ்ச்சியாக்கியது. என்னைப் பொறுத்தவரை, பணம் இல்லாமல் என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே வாழ எனக்குப் பலம் உண்டு," என்பதுதான் இதன் பொருள்.

"தேவன் எனக்கு அற்புதமான காரைத் தந்தார்; பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்பவர்கள்கூட இப்படிப்பட்ட காரை வைத்திருக்கமாட்டார்கள். கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக. நம்

முடைய தேவன் ஏழை அல்ல. நம் தேவன் பணக்காரக் கடவுள். ஆபிரகாம் வெள்ளிக்கும் பொன் னுக்கும் அதிபதியாக இருந்தான்," என்று பலர் ஆவேசமாகப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.

நான் சொல்லுகிறேன். நம் தேவன் ஏழை தேவன். "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவ ருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாக்கும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானார்," (2 கொரிந்தியர் 8:9) என்று பவுல் கூறுகிறார். இது ஒரு சூத்திரம் அல்ல. 2 கொரிந்தியர் 8:2, 3இல் பவுல் சொல்வதுதான் உண்மை. "அவர்கள் **மிகுந்த** உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், **கொடிய** தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் **பரிபூரண** சந்தோஷத்தினாலே **மிகுந்த** உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்," என்று மக்கதோனியா நாட்டு விசுவாசிகளைப்பற்றி அகாயா விசுவாசிகளுக்கு பவுல் சொல்வதுதான் செய்தி. நாம் எப்படிப் பணக்காரர்களாக வேண்டும் என்பதல்ல செய்தி. பவுல் தெரிந்துகொண்ட ஏழ்மையைக்கூட அவரே தெரிந்துகொண்டார். அவர் நினைத்திருந்தால் மிகவும் வளமான வாழ்க்கை வாழ்ந்திருக்க முடியும்.

எனக்குத் தெரிந்த ஒரு சகோதரன், அவருடைய பெயர் சுந்தர். அவர் நேற்று மகிமைக்குள் நுழைந் தார். அவர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். பரிசுத்தவான்கள் அவருக்காக ஜெபித்தார்கள். நாம் ஜெபித்தோம். ஒரு கேள்வி கேட்கிறேன். அவர் தோற்றுப்போனவரா அல்லது வெற்றிபெற்ற வரா? அவருக்காக ஜெபித்த பரிசுத்தவான்கள் தோற்றுப்போனவர்களா, வெற்றிபெற்றவர்களா? இதை எப்படி எதிர்கொள்வது?

ஒரு சகோதரன் கல்லூரியில் இடம் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஜெபிக்கிறார். இடம் கிடைக்க வில்லை என்று வைத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட வார்த்தைகள் அவிசுவாசத்தின் வார்த்தைகள் என்றும், இப்படிப் பேசக்கூடாது என்றும் நீங்கள் நினைக்கலாம். தேவன் தம்முடைய பிள்ளைகளுக் காக உன்னதமான திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், மரணத்திலும் நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்தான் என்பதுதான் நம் சாட்சி. வறுமையிலும் நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்பதுதான் சாட்சி. நெருக்கத்திலும் நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்பதுதான் நம் சாட்சி. வாழ்வில் மட்டும் அல்ல சாவிலும் கிறிஸ்து மகிமைப்படுவார் என்பதுதான் நம் சாட்சி. இது நம் கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம். "அது எப்படி? நாம் ஜெபித்தோம்; அவர் இறந்துபோனார். அதை எப்படி நீங்கள் கிறிஸ்து வாழ்வி லாகிலும், சாவிலாகிலும் மகிமைப்படுவார் என்று சாட்சியாகச் சொல்ல முடியும்?" என்று நினைக்க லாம்.

### உயிர்த்தெழுதலே இறுதி வெற்றி

நான் இப்போது என் பதிலைக் கூறுகிறேன். என்னுடைய பதில் ஒரேவொரு பதில்தான். ***உயிர்த்தெழு தல்தான் நம் இறுதி வெற்றி***. இதில் சிலருக்கு உப்புச்சப்பில்லாமல் போகலாம். "நீங்கள் ஏதோ வொரு இரகசியம் சொல்லப்போகிறீர்கள் என்று நான் நினைத்தேன். ஆனால், இவ்வளவுதானா?" என்று நினைக்கலாம்.

உயிர்த்தெழுதலே நம் இறுதி வெற்றி. நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? தேவனுடைய மக்கள் வறுமையில் இருக்கலாம், வளத்தில் இருக்கலாம்; சுகத்தில் இருக்கலாம், சுகவீனத்தில் இருக்கலாம்; உயர்வில் இருக்கலாம், தாழ்வில் இருக்கலாம். நாம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், இவையெல்லாவற்றிலும் இறுதி வெற்றி நம்முடையதே. 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரத் தில் பவுல் வெற்றி முழக்கம் இடுகிறார். "மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:55). இவையெல்லாவற்றிலும் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் " (1 கொரி. 15:57).

ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ மரிக்கும்போது, 1 தெசலோனிக்கேயரில் பவுல் எழுதுவது போல, நம்பிக்கையற்றவர்களைப்போல் நாம் துக்கித்துக்கொண்டிருப்பதில்லை. நாம் நம்பிக்கையோடு அந்த உடலை விதைக்கிறோம். இதுதான் தேவனுடைய பிள்ளைகளுடைய விசுவாசம். நம்முடைய சகோதரன் மகிமையில் பிரவேசிக்கிறான், இப்போது இளைப்பாறுகிறான். கர்த்தருடைய வருகை வரை அவருக்கு நீண்ட இளைப்பாறுதல். இது ஒரு கற்பனை அல்ல.

### உயிர்த்தெழுதலின் முன்சுவை

நான் இப்படிச் சொல்லும்போது ஒருவேளை உங்கள் மனம் ஒடிந்துபோகலாம். "அப்படியானால் எல்லாப் பிரச்சினைகளுக்கும், எல்லாப் போராட்டங்களுக்கும் இதுதான் தீர்வா அல்லது விடுதலையா?" என்று நீங்கள் அங்கலாய்க்கலாம். இல்லை. இந்த உயிர்த்தெழுதலின் முன்ருசியை

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்த வாழ்க்கையிலேயே, இந்தப் பூமியிலேயே, நாம் சுவைக்க முடியும். இறுதி வெற்றி உயிர்த்தெழுதல். ஆனால், இந்த உயிர்த்தெழுதலின் முன்சுவையை, முன்ருசியை, நாம் எங்கு பார்க்கலாம்? இந்தப் பூமியிலே இந்த மனித வாழ்க்கையிலே பார்க்கலாம்.

*"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11).*

எந்த வசனத்தையும் தனியாக உருவி எடுத்து, அதன் இடஅமைப்பைவிட்டுப் பொருள்விளக்கம் தரக் கூடாது. இடஅமைப்பைவிட்டுத் தனியாக வசனத்தை உருவி ஜெபிப்பதிலே ஆபத்து என்னவென்றால் அது ஒரு சட்டம்போல் ஆகிவிடும். யார்யாரெல்லாம் வியாதியாயிருக்கிறார்களோ அவர்களெல்லாம் இந்த இந்தச் சட்டத்தின்படி, இந்த இந்த வசனத்தின்படி, சுகத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் அல்லது ரோமர் 8:11இன்படி உங்களுக்கு சுகம் வழங்கப்படுகிறது என்பதல்ல. அப்படியல்ல.

## நமக்குள் உயிர்த்தெழுந்த கிறிஸ்து

நமக்குள் ஜீவன் தருகிற ஆவியானவர் வாசம்பண்ணுகிறார். இவர் நம்முடைய முழு நபருக்கும் ஜீவனைத் தருகிறவர். நம்முடைய ஆவி, ஆத்துமாவுக்கு ஜீவனைத் தருகிறவர். பிரதானமாக அவர் நம் ஆவிக்கு அவர் ஜீவனைத் தருகிறவர். ஜீவனைத் தருகிறவர் என்றால் அவர் நம் ஆவிக்கு ஜீவனாக இருக்கிறார். நாம் பரிசுத்த ஆவியால் வாழ முடியும். அவர் நம் ஆத்துமாவையும் தம் ஜீவனைக்கொண்டு பலப்படுத்துகிறார். அது மட்டும் அல்ல.

கேரளாவில் பருவ மழை என்றால் தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் கொஞ்சம் குளிராவது தட்டும். அதுபோல ஆவி, ஆத்துமாவில் ஜீவன் இருக்கும் என்றால் அதன் தாக்கம் சரீரத்திலும் இருக்கும். உன் ஆத்துமா மிகவும் தொய்ந்துவிட்டால், இருளடைந்துவிட்டால் அதன் தாக்கம் சரீரத்தில் இருக்கும். இந்த வசனம் உண்மை. நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் சாவுக்கேதுவான் நம் சரீரங்களை உயிர்ப்பிப்பார். எப்போது உயிர்ப்பிப்பார்? மார்த்தாள் சொன்னதுபோல, "கர்த்தருடைய வருகையிலே உயிர்ப்பிப்பார்," என்று சிலர் சொல்லலாம். அது இறுதி உயிர்த்தெழுதல். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உயிர்த்தெழுதலின் இறுதி நிறைவேற்றம் கர்த்தருடைய வருகையில்தான். *"பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" (1 கொரி. 15:43).* அது மகிமையானது. ஆனால், அதன் முன்சுவையை இன்று ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, ஒரு எல்லைக்கு உட்பட்டு, ஒரு வரையறைக்கு உட்பட்டு, அந்த உயிர்த்தெழுதலை நாம் இன்றைக்கு அனுபவிக்க முடியும். ஏனென்றால் நம்மில் வாசம்பண்ணுகிற கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து.

யோவான் 11ஆம் அதிகாரத்தின் வாதமே அதுதான். "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். மரியாளின் பதில்: ஆம் என் சகோதரன் கடைசி நாளிலே உயிர்த்தெழுவான். ஆண்டவருடைய பதில்: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். கர்த்தர் நமக்கு உயிர்த்தெழுதலாக இருக்கிறார். "என் கிருபை உனக்குப் போதும்" என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பவுலுக்கு மறுமொழியாகச் சொன்னபோது அவர் தம் உயிர்த்தெழுதலை அர்த்தப்படுத்தினார். எனவேதான் அவரால், "என் பலவீனங்களைக்குறித்து நான் மேன்மைபாராட்டுகிறேன்" என்று சொல்ல முடிந்தது. ஏதோவொரு விதத்தில் இந்த உயிர்த்தெழுதல் பவுலுக்குக் கிடைத்தது; நமக்கும் கிடைக்கிறது.

"நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவே நிற்கிறார்," (யோவான் 1:26) என்று யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைக்குறித்து சாட்சிசொன்னதுபோலவும், "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு," (யோவான் 4:32) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் சீடர்களிடத்தில் சொன்னதுபோலவும், நாம் அறியாத ஓர் உயிர்த்தெழுதல் நம்மிடத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இது மிகுந்த வல்லமையுள்ளது.

இதைப்பற்றி எபேசியர் முதல் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபிக்கும்போது சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு

அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைத் தரும்படிக்கு நான் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்" (எபே. 1:17-19). இதில் பேசப்படுகிற சங்கதி சாதாரணமான சங்கதி இல்லை. இதைக் கிரகித்துக்கொள்ளவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகலாம். ஆனால் நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன்.

### உயிர்த்தெழுதல் இன்றைய உண்மை

பவுல் வரப்போகிற உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசுகிறாரா அல்லது இன்றைக்குத் தேவனுடைய மக்களிடத்தில் அவர் நிரூபிக்கிற உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசுகிறாரா? இது இன்றைய உண் மையா அல்லது எதிர்கால நம்பிக்கையா? இது இன்றைய உண்மை. தேவன் நமக்கு அருளி யிருக்கிற ஜீவன் உயிர்த்தெழுந்த ஜீவன். அந்த ஜீவனிலே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உண்டு. சகோதரன் சுந்தரின் ஜீவனிலே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லையா? அது நிச்சயமாக அங்கு இருக்கிறது. அதிலுள்ள உயிர்த்தெழுதல் வீரியம் இழந்துவிட்டதால் நம் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வருவதில்லை. அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்பது தேவனுடைய எண்ணம், தேவனுடைய தீர்மானம். அவர் ஓய்வெடுக்கிற நேரம் வந்துவிட்டது.

தேவன் நமக்குப் பணம் தர முடியாது என்பதால் நாம் பண நெருக்கடியில் போவதில்லை. இந்த உயிர்த்தெழுதல் போதுமானது. ஒருவேளை கல்லூரியில் இடம் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் போகலாம். ஆனால், உயிர்த்தெழுதல் போதுமானது. ஒருவேளை ஒரு வருடம் கழித்து இடம் கிடைக்கலாம். இந்த ஜீவனில் உள்ள உயிர்த்தெழுதலின் வல்லமை ஒரு வருடத்திற்கு நம்மைத் தாங்க வல்லது.

எபிரேயர் 11ஆம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். அந்த அதிகாரத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அவர்கள் விசுவாசத்தினால் சாதித்த அற்புத சாகசங்கள் அங்கு எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் விசுவாசத்தினாலே விடுதலையைப் பெற சம்மதியாமல் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும் படிக்கு தங்களை சாவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள் என்பதும் விசுவாசம்தான் (வ. 35). ஒருவேளை "ஆண்டவரே, இந்த வருடம் நீர் எனக்கு இடம் தந்தே ஆக வேண்டும்" என்று ஜெபிப்பதும் விசுவாசம்தான். "ஆண்டவரே, நீர் அடுத்த வருடம் தருவதாக இருந்தாலும் உம்முடைய கரத்தி லிருந்து வருவது மிகவும் மேன்மையுள்ளதாக இருக்கும்," என்பதும் விசுவாசம்தான்.

### வெற்றி, தோல்வி

எனவே, தேவனுடைய மக்களாகிய நாம் இந்த உலகத்து மக்கள் வெற்றி என்று சொல்வதையெல் லாம் வெற்றி என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் தோல்வி என்று சொல்வதையெல்லாம் தோல்வி என்றும் சொல்லக்கூடாது. வெற்றியையும், தோல்வியையும் அவர்கள் வரையறுப்பதுபோல் நாம் வரையறுக்கக்கூடாது. இந்த உலகம் தோல்வி என்று சொல்வதால் அது தோல்வி அல்ல. இந்த உலகம் வெற்றி என்று சொல்வதால் அது வெற்றியும் அல்ல.

எனவே, நம் சாட்சிகளெல்லாம், "நான் ஜெபித்தேன். கர்த்தர் எலியாவை காகத்தைக்கொண்டு போஷித்ததுபோல் என்னையும் போஷித்தார்" என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தோல்விகளையும் சாட்சிகளாகச் சொல்லலாம்.

எபிரேயர் 11ஆம் அதிகாரத்தின் முதல் பாகமும் சாட்சிதான், இரண்டாவது பாகமும் சாட்சிதான். குறிப்பாக அந்த மரண இருளின் பள்ளத்தாக்கு வழியாக நாம் நடந்துபோகும்போது அந்த உயிர்த் தெழுந்த வல்லமை நம்மைத் தாங்குகிறதே! உயிர்த்தெழுந்த வல்லமை திடுதிப்பென்று ஒவ்வொரு நாளும் "இதோ உயிர்த்தெழுந்த வல்லமை உள்ளது! உயிர்த்தெழுந்த வல்லமை உள்ளது!" என்று பகிரங்கமாகத் தெரியாது. சுரங்கப்பாதையில் கார், பஸ்கள் போகும்போது இருட்டாக இருப்பது போல பல நாட்கள், மாதங்கள், வருடங்கள் இருளாகத் தோன்றலாம். அதுதான் மரண இருளின் பள்ளத்தாக்கு. முற்புறம் இருள், பிற்புறம் இருள், வலது பக்கம் இருள், இடது பக்கம் இருள், மேலே இருள், கீழே இருள். எல்லாப் பக்கமும் இருள். இதுதான் மரண இருள். ஆனால், இதன் பொருள் உயிர்த்தெழுந்த வல்லமை காணாமல் போய்விட்டது என்பதல்ல.

சகோதரன் சுந்தருக்குள் இருக்கிற உயிர்த்தெழுந்த வல்லமைக்கு இப்போது ஓய்வு. சில செடிகளைப் பற்றிச் சொல்லுகிறார்கள். குளிர்காலம் முழுவதும் அது பூமிக்குக் கீழே இருக்கும். அதன் பொருள் அந்த விதையில் இருக்கும் ஜீவன் போய்விடவில்லை. பருவ காலம் மாறுகிறது. அது முளைக்கிறது.

எனவே, உயிர்த்தெழுந்த வல்லமை இன்று நம்மில் இருப்பதுபோல் தோன்றவில்லை என்பதற்காக நாம் ஜெபிப்பதை நிறுத்தக்கூடாது. "உன் கதி இவ்வளவுதான்தான்" என்று மற்றவர்கள் நமக்குத்

தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக நாம் ஜெபிப்பதை ஒருநாளும் நிறுத்தக்கூடாது. தேவன் தீர்ப்புச் சொல்லவேண்டும். அவரிடமிருந்து தீர்ப்பு வராதவரை நாம் ஜெபிக்க வேண்டும். தேவன் தம் பிள்ளைகளிடமிருந்து ஜெபத்தை எதிர்பார்க்கிறார். “என் கிருபை உனக்குப் போதும்” என்று சொல்லு கிறவரை அவரிடத்தில் போய் மூன்றுமுறை மட்டும் அல்ல, எத்தனைமுறை வேண்டுமானாலும் ஜெபிக்கலாம். அது தேவனுக்கு மிகவும் மகிமையானது. “என்னுடைய உயிர்த்தெழுந்த வல்லமை போதும்” என்று சொல்லும்போது, “போதும் ஆண்டவரே” என்று நாமும் சொல்லலாம். என்னுடைய பண நெருக்கடிக்கு, கல்லூரி இடத்துக்கு, வேலைக்கு, உடல் நலத்துக்கு, குடும்பத்துக்கு அவ ருடைய உயிர்த்தெழுந்த வல்லமை போதும். நாம் எல்லாருமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலி னால்தான் வாழ வேண்டும்.

இந்த வார்த்தைகளைக்கொண்டு தேவன் நம்மை உற்சாகப்படுத்துவாராக. நம்முடைய வாழ்க்கை முற்றிலும் ஜெயங்கொள்ளுகிற வாழ்க்கைதான். அதன் முன்சுவையை இன்று நாம் அனுபவிக்க முடி யும். தோல்விகள்போல் தோன்றுபவைகளெல்லாம் தோல்விகள் அல்ல. அந்தத் தோல்விகளிலும் நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அனுபவிக்க முடியும். நம்முடைய முடிவு சம்பூரணமான வெற்றியுள்ள முடிவாக இருக்கும். ஆமென்